இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

# 1981 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க,

# கடல் தீழ்ப்புத் தடுப்புச் சட்டம்

[1981, செத்தெம்பர் மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1981, செத்தெம்பர் மாதம் 18 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்** வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப் பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.65 தபாற் செலவு : சதம் 75

## 1981 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, கடல் தீழ்ப்புத் தடுப்புச் சட்டம்

[1981, செத்தெம்பர் மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ.—ஓ. 76/79
1308

**இலங்கை நீர்ப்பரப்புக்களில் தீழ்ப்பைத் தடுப்பதற்கு, குறைப்பதற்கு அத்துடன் கட்டுப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும், கடல் தீழ்ப்பைத் தடுப்பதற்கான சர்வதேச சமவாயங்களுக்குப் பயன் கொடுப்பதற்கும், அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1981 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, கடல் தீழ்ப்புத் தடுப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியில் (அது இதனகத்துப்பின்னர் "நியமித்த தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

### பாகம் I

### கடல் தீழ்ப்புத் தடுப்பு அதிகாரசபையைத் தாபித்தல்

2. (1) இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும் கடல் தீழ்ப்புத் தடுப்பு அதிகாரசபை என அழைக்கப்படவுள்ள அதிகாரசபை ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்; இச்சபையானது (3) ஆம் உட்பிரிவின்கீழ் அப்போதைக்கு அவ்வதிகாரசபையின் உறுப்பினர்களாயிருக்கும் ஆட்களைக் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

*கடல் தீழ்ப்புத் தடுப்பு அதிகார சபையைத் தாபித்தல்.*

(2) அதிகாரசபையானது அமைச்சரின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நிருவாகத்திற்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையானது அமைச்சரால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) கப்பற்றுறையிலும், துறைமுகத் தொழிற்பாடுகளிலும், கடல் தீழ்ப்புத் தடுப்பிலும், பரந்த அனுபவம் உடையவர்களும் திறமை காட்டியுள்ளவர்களுமென அமைச்சருக்குத் தோன்றுபவர்களான மூன்று உறுப்பினர்கள் ;

(ஆ) வெளிநாட்டலுவல்கள் எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படவுள்ள ஓர் உறுப்பினர் ; அத்துடன்

(இ) கடற்றொழில் எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படவுள்ள ஓர் உறுப்பினர்.

(4) அதிகாரசபையின் தவிசாளராக இருப்பதற்கென (3) ஆம் உட்பிரிவின் (அ) எனும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் ஒருவரை அமைச்சர் நியமித்தல் வேண்டும்.

(5) தவிசாளரும் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அமைச்சரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களும், (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

2—எ57121—6,525 (06/81)

(6) அமைச்சர், தவிசாளரை அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான காரணம் எதுவும் காட்டாமல் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் பதவியிலிருந்து அகற்றலாம் :

ஆயின், எவ்வாறாயினும், (3) ஆம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியின் கீழ் அல்லது (இ) எனும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும், அத்தகைய உறுப்பினரைப் பெயர்குறித்து நியமித்த அமைச்சரின் ஒருப்பாடின்றி இப்பிரிவின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்படுதல் ஆகாது.

(7) தவிசாளரால் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரசபையின் வேறு எவரேனும் உறுப்பினரால் தமது பதவி வறிதாக்கப்படும் சந்தருப்பத்தில் அல்லது முற்போந்த உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அவர் பதவியிலிருந்து அகற்றப்படும் சந்தருப்பத்தில், அமைச்சர் வேறோர் ஆளை, இவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்திற்கு அத்தகைய பதவியை வகிப்பதற்கென நியமிக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய வறிதாக்கல் அல்லது பதவி அகற்றல், (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (இ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினரினால் ஏற்படுத்தப்பட்டதாக அல்லது ஓர் உறுப்பினர் சம்பந்தப்பட்டதாக இருக்கின்றவிடத்து, அத்தகைய உறுப்பினரைப் பெயர்குறித்து நியமித்த அமைச்சரின் ஒருப்பாடின்றி இவ்வுட்பிரிவின்கீழ் நியமனம் எதுவும் செய்யப்படுதல் ஆகாது.

(8) தவிசாளர் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினர், சுகவீனம் காரணமாக, அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்றவிடத்து, விடயத்திற்கேற்றவாறு அவரது இடத்தில் தவிசாளராக அல்லது உறுப்பினராகச் செயலாற்றுவதற்கென வேறெவரேனும் ஆளை அமைச்சர் நியமிக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், அவ்வாறு தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராக உள்ள உறுப்பினர் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (இ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவராயிருப்பின், அத்தகைய உறுப்பினரைப் பெயர் குறித்து நியமித்த அமைச்சரின் ஒருப்பாடின்றி, இவ்வுட்பிரிவின்கீழ் நியமனம் எதுவும் செய்யப்படுதல் ஆகாது.

(9) தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர், விலகுவதாக அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம், விடயத்திற்கேற்றவாறு தவிசாளர் என்ற தமது பதவியிலிருந்து அல்லது உறுப்பினர் என்ற தமது பதவியிலிருந்து முன்னரே விட்டு விலகலாம்.

(10) ஆளொருவர் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பின் அல்லது வரின், அவர் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது உறுப்பினரொருவராகத் தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையிழந்தவராதல் வேண்டும்.

(11) அதிகாரசபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதல் ஆகாது.

(12) அதிகாரசபையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும், அத்தகைய வீதங்களிலும் ஊதியம் அளிக்கப்படலாம் என்பதுடன், அவர்கள் அவ்வாறு தீர்மானிக்கப்படும் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தொழுகுதலும் வேண்டும்.

(13) அதிகாரசபையின் கூட்டமெதற்குமான நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அதிகாரசபையின் கூட்டங்கள் தொடர்பிலும், அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துவது தொடர்பிலும் அதிகாரசபையானது நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

## பாகம் II

### தீழ்ப்பைத் தடுத்தல்—குற்றவியற் பொறுப்பு

**எண்ணெய் அல்லது வேறு தீழ்ப்பாக்கி இலங்கை நீர்ப்பரப்புக்களினுள் வெளியேறல் அல்லது கசிதல்.**

3. ஏதேனும் எண்ணெய் அல்லது வேறு தீழ்ப்பாக்கி, ஏதேனும் கப்பலிலிருந்து, அல்லது எண்ணெயை அல்லது வேறு தீழ்ப்பாக்கியைக் கப்பலொன்றிலிருந்து அல்லது கப்பலொன்றுக்கு (தரையின்மீது ஓரிடத்திற்றாயினுஞ்சரி அல்லது ஓரிடத்திலிருந்தாயினுஞ்சரி, அல்லது வேறொரு கப்பலிலிருந்தாயினுஞ்சரி) மாற்றுதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் உபகரணத்திலிருந்து, அல்லது கரைக்கப்பாலுள்ள நிறுவுகையொன்றிலிருந்து அல்லது ஒரு குழாய் இணைப்பிலிருந்து அல்லது தரையின் மீதுள்ள ஏதேனும் இடத்திலிருந்து அல்லது கடற்படுக்கையின் அல்லது அடிமண்ணின் ஆய்வுக்கான ஏதேனும் தொழிற்பாட்டின் விளைவாக அல்லது அவற்றின் இயற்கை வளங்களின் ஆய்வுக்கான ஏதேனும் தொழிற்பாட்டின் விளைவாக இலங்கை நீர்ப்பரப்புகளினுள் வெளியேறினால் அல்லது கசிந்தால், அப்போது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக—

(அ) வெளியேற்றம் அல்லது கசிவு கப்பலொன்றிலிருந்து ஏற்படுமிடத்து, கப்பலின் சொந்தக்காரர், இயக்குநர், தலைவர் அல்லது முகவர் ; அல்லது

(ஆ) வெளியேற்றம் அல்லது கசிவு, எண்ணெயை அல்லது ஒரு தீழ்ப்பாக்கியை ஒரு கப்பலுக்கு அல்லது ஒரு கப்பலிலிருந்து மாற்றிக்கொண்டிருக்கும்பொழுது ஏற்படுமிடத்து, கப்பலின் சொந்தக்காரர் அல்லது தலைவர், அல்லது, வெளியேற்றம் அல்லது கசிவு எண்ணெயை அல்லது ஒரு தீழ்ப்பாக்கியை மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் உபகரணத்திலிருந்து ஏற்படுமிடத்து, உபகரணத்தின் சொந்தக்காரர் அல்லது அதற்குப் பொறுப்பாயிருக்கும் ஆள் ; அல்லது

(இ) வெளியேற்றம் அல்லது கசிவு கரைக்கப்பாலுள்ள நிறுவுகையொன்றிலிருந்து ஏற்படுமிடத்து அல்லது கடற்படுக்கையின் அல்லது அடிமண்ணின் ஆய்வுக்கான அல்லது அவற்றின் இயற்கை வளங்களின் ஆய்வுக்கான எவையேனும் தொழிற்பாடுகளின் விளைவாக

ஏற்படுமிடத்து, அந்த நிறுவுகையின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அல்லது தொழிற்பாட்டைக் கொண்டுநடாத்தும் ஆள் அல்லது தொழிற்பாட்டிற்குப் பொறுப்பாயிருக்கும் ஆள் ; அல்லது

(ஈ) வெளியேற்றம் அல்லது கசிவு குழாய் இணைப்பொன்றிலிருந்து ஏற்படுமிடத்து குழாய் இணைப்பின் சொந்தக்காரர் அல்லது இயக்குநர் ; அல்லது

(உ) வெளியேற்றம் அல்லது கசிவு தரையின்மீதுள்ள ஓரிடத்திலிருந்து ஏற்படுமிடத்து, அந்த இடத்தின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர், அல்லது வெளியேற்றம் அல்லது கசிவு சொந்தக்காரரின் அல்லது இருப்பாட்சியாளரின் (வெளிப்படையான அல்லது உட்கிடையான) அனுமதியின்றி அந்த இடத்திலிருக்கும் வேறோர் ஆளின் செயலினால் விளையுமிடத்து, அந்த ஆள்,

தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

இலங்கை நீர்ப்பரப்புக் களினுள் எண்ணெய்யை அல்லது வேறு திழ்ப்பாக்கியைக் கொட்டுதல்.

4. அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஓர் அனுமதிச் சீட்டின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கவன்றி ஏதேனும் எண்ணெயை அல்லது வேறு தீழ்ப்பாக்கியை இலங்கை நீர்ப்பரப்புக்களினுள் கொட்டுகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

சிறப்பான எதிர்வாதங்கள்.

5. (1) மூன்றும் பிரிவின்கீழ் அல்லது 4 ஆம் பிரிவின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர் ஒரு கப்பலின் சொந்தக்காரராக, இயக்குநராக, தலைவராக அல்லது மூகவராக, அல்லது கரைக்கப்பாலுள்ள நிறுவுகையொன்றின் சொந்தக்காரராக அல்லது இருப்பாட்சியாளராக இருக்குமிடத்து, ஏதேனும் கப்பலின் அல்லது ஏதேனும் கரைக்கப்பாலுள்ள நிறுவுகையின் பாதுகாப்பைப் பெறுவதன் நோக்கத்திற்காக அல்லது அத்தகைய கப்பலுக்கு அல்லது கரைக்கப்பாலுள்ள நிறுவுகைக்கு அல்லது கப்பற் சரக்கிற்கு ஏதேனும் சேதம் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்திற்காக அல்லது கடலிலுள்ள மனித உயிரைக் காப்பதற்காகவே சம்பந்தப்பட்ட எண்ணெய் அல்லது வேறு தீழ்ப்பாக்கி வெளியேற்றப்பட்டது அல்லது கொட்டப்பட்டது எனவும், அவ்விதம் வெளியேற்றப்படுவதால் அல்லது கொட்டப்படுவதால் ஏற்படுத்தப்படும் சேதத்தைக் குறைப்பதில் நியாயமான கவனம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் எண்பிப்பது ஓர் எதிர்வாதமாயிருத்தல் வேண்டும்.

(2) மூன்றும் பிரிவின்கீழ் தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர், ஒரு கப்பலின் சொந்தக்காரராக, இயக்குநராக, தலைவராக அல்லது மூகவராக இருக்குமிடத்து—

(அ) எண்ணெய் அல்லது வேறு தீழ்ப்பாக்கி கப்பலுக்கேற்பட்ட சேதத்தின் விளைவாகவே கசிந்தது என்பதனையும், கசிவு கண்டுபிடிக்கப்பட்டபின்னர் அக்கசிவினைத் தடுக்கும் அல்லது குறைக்கும் நோக்கத்திற்காக நியாயமான எல்லா முற்காப்புகளும் மேற்கொள்ளப்பட்டன என்பதனையும் ;

(ஆ) எண்ணெய் அல்லது வேறு தீழ்ப்பாக்கி நியாயமான கவனம் எடுக்க வேண்டியதால் அல்லாது, ஏற்பட்ட ஒழுக்கின் விளைவினாலேயே கசிந்து வெளியேறியது என்பதனையும், அக்கசிவு கண்டு பிடிக்கப்பட்டதன் பின்னர் சாத்தியமானவரை விரைவாக அக் கசிவினைத் தடுக்கும் அல்லது குறைக்கும் நோக்கத்திற்காக நியாயமான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன என்பதனையும்,

எண்பித்தல் ஓர் எதிர்காவாதமாயிருத்தல் வேண்டும்.

(3) (அ) மூன்றும் பிரிவின்கீழான தவறொன்றுக்கு குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆளொருவர், விடயத்திற்கேற்ப, எந்த உபகரணத்திலிருந்து எண்ணெய் அல்லது தீழ்ப்பாக்கி கசிந்துசென்றதெனச் சார்த்தப்படுகின்றதோ அந்த ஏதேனும் உபகரணத்தின் சொந்தக்காரராக அல்லது அதற்குப் பொறுப்பாகவிருக்கும் ஆளாக இருக்குமிடத்து, அல்லது எந்தக் கரைக் கப்பாலுள்ள நிறுவுகையிலிருந்து, குழாய் இணைப்பிலிருந்து அல்லது தரையின் மீதுள்ள இடத்திலிருந்து எண்ணெய் அல்லது தீழ்ப்பாக்கி கசிந்துசென்றதெனச் சார்த்தப்படுகின்றதோ அந்த ஏதேனும் கரைக்கப் பாலுள்ள நிறுவுகையின், குழாய் இணைப்பின் அல்லது தரையின்மீதுள்ள இடத்தின் சொந்தக்காரராக அல்லது இருப்பாட்சியாளராக இருக்குமிடத்து, அந்த ஆள், எண்ணெயின் அல்லது வேறு தீழ்ப்பாக்கியின் கசிவு நியாயமான கவனம் எடுக்க வேண்டியதால் ஏற்பட்டதல்ல என்றும், கசிவு கண்டு பிடிக்கப்பட்டதன் பின்னர் சாத்தியமானவரை விரைவாக அதை நிற்பாட்டுவதற்கான அல்லது குறைப்பதற்கான நியாயமான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன என்றும் எண்பிப்பது அவருக்கு ஓர் எதிர்காவாதமாக அமைதல் வேண்டும்.

(ஆ) கரைக்கப்பாலுள்ள நிறுவுகையொன்றின், குழாய் இணைப்பொன்றின் அல்லது தரையின்மீதுள்ள இடமொன்றின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு, சொந்தக்காரரின் அல்லது இருப்பாட்சியாளரின் (வெளிப்படையான அல்லது உட்கிடையான) அனுமதியின்றி அந்த இடத்திலிருந்த ஆளொருவரின் செயலினால் வெளியேற்றம் விளைக்கப்பட்டது என்பதை எண்பிப்பது ஓர் எதிர்காவாதமாதல் வேண்டும்.

(4) (அ) எழுத்திலான ஏதேனும் சட்டத்தால் அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கையில் அல்லது அமைச்சரின் எழுத்திலான அறிவுறுத்துரைகளின்கீழ் செயலாற்றுகையில், அமிழ்ந்த, தரை தட்டிய அல்லது கைவிடப்பட்ட கலங்கள் அதிகாரச்சபையினால் அகற்றப்படுவதன் விளைவாக ஏதேனும் எண்ணெய் அல்லது வேறு தீழ்ப்பாக்கி வெளியேறுமிடத்து அல்லது கொட்டப்படுமிடத்து ;

(ஆ) தீழ்ப்பிலிருந்துவரும் சேதத்தைக் குறைப்பதற்கென குறித்த தீழ்ப்புச் சம்பவங்களை எதிர்க்கும் நோக்கத்திற்காக எண்ணெய் அல்லது வேறு தீழ்ப்பாக்கிகள் அடங்கிய பதார்த்தங்கள் அதிகாரசபையால் வெளியேற்றப்படுமிடத்து அல்லது கொட்டப்படுமிடத்து,

3 ஆம் பிரிவின்கீழ் அல்லது 4 ஆம் பிரிவின்கீழ் பொறுப்பெதுவும் எழுதலாகாது.

## பாகம் III

## தீழ்ப்பைத் தடுத்தல்—குடியியற் பொறுப்பு

குடியியற் பொறுப்பு

6. (1) மூன்றும் பிரிவில் அல்லது 4 ஆம் பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் செயலின் விளைவாக இலங்கை நீர்ப்பரப்புகள் அல்லது முற்கரை தீழ்ப்பாகுமிடத்து, விடயத்துக்கேற்றவாறு கப்பலின் சொந்தக்காரர் அல்லது இயக்குநர் அல்லது உபகரணத்தின் சொந்தக்காரர் அல்லது அதற்குப் பொறுப்பாயிருக்கும் ஆள் அல்லது கரைக்கப்பாலுள்ள நிறுவுகையின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அல்லது குழாய் இணைப்பின் சொந்தக்காரர்—

(அ) ஏதேனும் எண்ணெயின் அல்லது தீழ்ப்பாக்கியின் வெளியேற்றத்தால், கசிவினால் அல்லது அவை கொட்டப்படுவதால் இலங்கையின் நீர்ப்பரப்புக்களுக்கு அல்லது முற்கரைக்கு அல்லது அவற்றோடு தொடர்புபட்ட எவையேனும் நலன்களுக்கு ஏற்படுத்தப்படும் ஏதேனும் சேதத்துக்கு ;

(ஆ) ஏதேனும் எண்ணெயின் அல்லது தீழ்ப்பாக்கியின் வெளியேற்றத்தால், கசிவினால், அல்லது அவை கொட்டப்படுவதால் இலங்கையின் நீர்ப்பரப்புக்களுக்கு அல்லது முற்கரைக்கு அல்லது அவற்றோடு தொடர்புபட்ட எவையேனும் நலன்களுக்கு ஏற்படுத்தப்படும் ஏதேனும் சேதத்தைத் தடுக்கும், குறைக்கும் அல்லது அகற்றும் நோக்கத்திற்கென எடுக்கப்படும் எவையேனும் வழிவகைகளின் செலவுகளுக்கு,

பொறுப்பாளியாதல் வேண்டும்.

(2) இப்பிரிவில் இலங்கை நீர்ப்பரப்புக்களுடன் அல்லது முற்கரையுடன் தொடர்புபட்ட நலன்கள் என்பது—

(அ) கடற்றொழிற் செயற்பாடுகள் உட்பட, கடல், கரையோர, ஏறுதுறை அல்லது பொங்குமுகச் செயற்பாடுகள் என்பனவற்றையும் ;

(ஆ) இலங்கை நீர்ப்பரப்புக்களில் அல்லது கடற்கரைகள், கடல் நீரடி முருகைக் கற்பாறைகள் உட்பட முற்கரையில் உல்லாசப் பிரயாணத்துறையை ஊக்குவித்தலும், உல்லாசப் பிரயாணத்துறைக் கவர்ச்சிகளைப் பேணுதலும் அபிவிருத்தி செய்தலும் என்பனவற்றையும் ;

(இ) கரையோரக் குடிமக்களின் சுகநலத்தையும் அவர்களது நல்வாழ்வையும் ;

(ஈ) உயிர்வாழும் கடல் வளங்களினதும் வனவிலங்குகளினதும் பாதுகாப்பையும் பேணுகையையும்,

உள்ளடக்கும்.

(3) ஏதேனும் எண்ணெய் அல்லது வேறு தீழ்ப்பாக்கி இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கப்பல்களிலிருந்து வெளியேற்றப்படுமிடத்தும் அல்லது கசிகின்றவிடத்தும் அல்லது கொட்டப்படுமிடத்தும், இப்பிரிவின் கீழ் பொறுப்பானது, ஒவ்வொரு கப்பலினதும் சொந்தக்காரரால் அல்லது இயக்குநரால் உறப்படுமிடத்தும், அத்துடன் சொந்தக்காரர் அல்லது இயக்குநர் ஒவ்வொருவரும் எந்தச் சேதத்துக்கு அல்லது செலவுகளுக்கும்

பொறுப்பாகின்றாரோ அந்தச் சேதம் அல்லது செலவுகள், மற்றவர் அல்லது மற்றவர்கள் பொறுப்பாளியாகும் அல்லது பொறுப்பாளிகளாகும் சேதத்திலிருந்து அல்லது செலவுகளிலிருந்து நியாயமான முறையில் பிரிக்கமுடியாததாக அல்லது பிரிக்க முடியாதனவாக இருக்குமிடத்தும், இந்தப் பிரிவின்கீழ் சொந்தக்காரர் அல்லது இயக்குநர் எந்தச் சேதத்திற்கு அல்லது செலவுகளுக்குப் பொறுப்பாளியாவாரோ அந்தச் சேதம் அல்லது செலவுகள் முழுவதற்கும் சொந்தக்காரர் அல்லது இயக்குநர் ஒவ்வொருவரும் மற்றவருடன் அல்லது மற்றவர்களுடன் ஒருமித்தும் தனித்தும் பொறுப்பாளியாதல் அல்லது பொறுப்பாளிகளாதல் வேண்டும்.

விசேட எதிர்காவாதங்கள்.

7. ஆறும் பிரிவின்கீழ் எவரேனும் ஆளுக்கெதிராக வழக்கொன்று கொண்டுவரப்படுமிடத்து, விடயத்துக்கேற்றவாறு, வெளியேற்றம், கசிவு அல்லது கொட்டுதல், ஒரு போர்ச் செயலினால், எதிர்ப்பு நடவடிக்கைகளினால், உள்நாட்டுக் கலகத்தினால், கிளர்ச்சியினால் அல்லது புறநடையானதும் தவிர்க்க முடியாததும் தடுக்கமுடியாததுமான தன்மையதான இயற்கை நிகழ்வொன்றினால் ஏற்பட்டது என்பதனை எண்பித்தல் ஓர் எதிர்காவாதமாதல் வேண்டும்.

பொறுப்பை வரையறுத்தல்.

8. (1) (அ) ஆறும் பிரிவின்கீழான சம்பவங்களில் ஏதேனும் ஒன்று தொடர்பிலான பொறுப்பானது, கப்பலினது எடையளவின் ஒவ்வொரு மெற்றிக் தொன்னுக்கும் ஒரு கூட்டு மொத்தத் தொகையாக ஏழாயிரத்து இருநூற்றுப்பத்து ரூபாவுக்கு (அல்லது சர்வதேச நாணய நிதியத்தின் விசேட மீளப்பெறுகைத் திணைக்களத்தில் வைத்திருக்கப்பட்ட விசேட மீளப்பெறுகை உரிமைகளின் நியதிகளின்படி அதற்குச் சமமானதற்கு) வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) விடயத்திற்கேற்றவாறு ஒரு கப்பலின் சொந்தக்காரரால் அல்லது இயக்குநரால் அல்லது ஓர் உபகரணத்தின் சொந்தக்காரரால் அல்லது அதற்குப் பொறுப்பாகவிருக்கும் ஆளினால், அல்லது கரைக்கப்பாலுள்ள ஒரு நிறுவுகையின், குழாய் இணைப்பின் அல்லது தரையின்மீதுள்ள இடத்தின் சொந்தக்காரரால் அல்லது இருப்பாட்சியாளரால் இச்சட்டத்தின் இந்தப் பாகத்தின்கீழ் உறப்பட்ட ஆகக்கூடிய பொறுப்பானது, ஒரு கூட்டு மொத்தத் தொகையாக எழுபத்தைந்து கோடி ரூபாவுக்கு (அல்லது சர்வதேச நாணய நிதியத்தின் விசேட மீளப்பெறுகைத் திணைக்களத்தில் வைத்திருக்கப்பட்ட விசேட மீளப்பெறுகை உரிமைகளின் நியதிகளின்படி அதற்குச் சமமானதற்கு) வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆறும் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் செயல், விடயத்திற்கேற்றவாறு ஒரு கப்பலினது சொந்தக்காரரின் அல்லது இயக்குநரின் அல்லது ஓர் உபகரணத்தின் சொந்தக்காரரின் அல்லது அதற்குப் பொறுப்பாகவிருக்கும் ஆளின் அல்லது கரைக்கப்பாலுள்ள ஒரு நிறுவுகையினது, குழாய் இணைப்பினது அல்லது தரையின்மீதுள்ள இடத்தினது சொந்தக்காரரின் அல்லது இருப்பாட்சியாளரின் அசட்டைகாரணமாக நிகழுமாயின், அத்தகைய ஆள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட வரையறைகளைத் தமக்குப் பயன்படுத்திக்கொள்ள உரித்துடையவராதலாகாது.

(3) இப்பிரிவில் "கப்பலின் எடையளவு" என்பது கப்பலின் மொத்த எடையளவு எனப் பொருள்படும்.

**கட்டாயக் காப்புறுதி.**

9. (1) கப்பற் சரக்காக இரண்டாயிரம் மெற்றிக் தொன்களுக்கு மேலான எண்ணெயைத் தொகையாகக் கொண்டு செல்லுதும், இலங்கையிலுள்ள ஒரு துறைமுகத்தினுள் நுழைவதும் அல்லது துறைமுகத்தை விட்டுச் செல்வதும் இலங்கை நீர்ப்பரப்புக்களினுள் அல்லது இலங்கை நீர்ப் பரப்புக்களிலுள்ள ஒரு முடிவிடத்தினுள் நுழைவதும் அல்லது இலங்கை நீர்ப்பரப்புக்களை அல்லது இலங்கை நீர்ப்பரப்புக்களிலுள்ள ஒரு முடிவிடத்தை விட்டுச் செல்வதுமான கப்பலொன்றின் சொந்தக்காரர் அல்லது இயக்குநர், அக்கப்பல் தொடர்பில் செல்லுபடியானதொரு காப்புறுதிச் சான்றிதழை அல்லது வங்கியொன்றின் உத்தரவாதத்தைப் போன்ற அத்தகைய வேறு நிதிப் பிணைப்பொறுப்பை அல்லது அதிகாரசபையால் ஏற்கப்படற்பாலதானதும் ஒரு சர்வதேச நிதியத்தால் ஒப்படைக்கப்பட்டதுமான ஒரு சான்றிதழை, அத்துடன் கப்பல், 1969 ஆம் ஆண்டின் எண்ணெய்த் தீழ்ப்புச் சேதத்துக்கான குடியியற் பொறுப்புமீதான சர்வதேச சமவாயத்திற்கு ஒரு திறத்தவரான ஓர் அரசில் பதிவுசெய்யப்பட்டிருப்பின் அந்த அரசின் தோதான அதிகாரியால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை வைத்திருத்தல் வேண்டும்.

(2) கப்பலொன்று தொடர்பில் (1) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப் பட்ட காப்புறுதிச் சான்றிதழ் அல்லது வேறு பிணைப்பொறுப்பு கப்பலில் கொண்டுசெல்லப்படுதல் வேண்டும் என்பதுடன், கோரிக்கையின்மேல் அதிகாரசபைக்கு அல்லது அதற்கென அதிகாரசபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்குத் தலைவரால் காண்பிக்கப்படுதலும் வேண்டும்.

(3) கப்பலொன்று (1) ஆம் உட்பிரிவுக்கு முரணாக இலங்கையிலுள்ள ஒரு துறைமுகத்தினுள் நுழையுமிடத்து அல்லது துறைமுகத்தை விட்டுச் செல்லுமிடத்து, அல்லது ஒரு துறைமுகத்தினுள் வந்தடைய எத்தனிக்குமிடத்து, அல்லது துறைமுகத்தை விட்டுச் செல்ல எத்தனிக்குமிடத்து அல்லது இலங்கை நீர்ப்பரப்புக்களை வந்தடையுமிடத்து அல்லது விட்டுச் செல்லுமிடத்து அல்லது வந்தடைய அல்லது விட்டுச்செல்ல எத்தனிக்குமிடத்து, அத்தகைய கப்பலின் சொந்தக்காரர், இயக்குநர் அல்லது தலைவர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஓர் இலட்சம் ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதல் வேண்டும்.

(4) கப்பலொன்று (2) ஆம் உட்பிரிவில் தேவைப்படுத்தப்பட்டவாறுகச் சான்றிதழொன்றைக் கொண்டு செல்லத் தவறுமிடத்து அல்லது கப்பலின் தலைவர் அதனைக் காண்பிக்கத் தவறுமிடத்து, கப்பலின் சொந்தக்காரர், இயக்குநர் அல்லது தலைவர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஓர் இலட்சம் ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதல் வேண்டும்.

(5) கப்பலொன்று இப்பிரிவுக்கு முரணாக இலங்கையிலுள்ள ஒரு துறைமுகத்தை விட்டுச்செல்ல எத்தனிக்குமிடத்து, அக்கப்பல், அதிகாரசபையினால் தடுத்துவைக்கப்படலாம்.

## பாகம் IV

### தீழ்ப்புக்கெதிரான தடுப்பு வழிவகைகள்

எண்ணெயும் தீழ்ப்பாக்கி களும் தொடர்பிலான பதிவேட்டுப் புத்தகங்கள்.

10. (1) இலங்கை நீர்ப்பரப்புக்களிலுள்ள எல்லாக் கப்பல்களும், எண்ணெய் தொடர்பிலானவையும் வேறு தீழ்ப்பாக்கிகள் தொடர்பிலானவையுமான பதிவேட்டுப் புத்தகங்களைக் கொண்டுசெல்லுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பிடு செய்யப்பட்ட ஏதேனும் கப்பலின் தலைவர், பின்வருவன தொடர்பில் கப்பலிலான அல்லது கப்பல் சம்பந்தமான தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதை அவ்வெண்ணெய்ப் பதிவேட்டுப் புத்தகங்களில் பதிதல் வேண்டும் :—

(அ) எண்ணெய்ச் சரக்கேற்றல் ;

(ஆ) இலங்கை நீர்ப்பரப்புக்களிலுள்ள கப்பலொன்றுக்கு அல்லது கப்பலொன்றிலிருந்து எண்ணெய்ச் சரக்கை மாற்றுதல் ;

(இ) எண்ணெய்ச் சரக்கை வெளியேற்றுதல் ;

(ஈ) எண்ணெய்த்தாங்கிகளை (கப்பற் சரக்காயினுஞ்சரி, கப்பற் கரிக்கல எரிபொருள் தாங்கிகளாயினுஞ்சரி) ஞாலப்பாரப்படுத்துவதும் அத்துடன் அத்தகைய தாங்கிகளிலிருந்து ஞாலத்தை வெளியேற்றுதலும், தாங்கிகளைச் சுத்தமாக்கலும் ;

(உ) நீரிலிருந்து எண்ணெயைப் பிரித்தெடுத்தல் அல்லது எண்ணெயைக் கொண்டுள்ள ஏதேனும் கலவையிலுள்ள வேறு பதார்த்தங்களிலிருந்து எண்ணெயைப் பிரித்தெடுத்தல் ;

(ஊ) வேறேதேனும் எண்ணெய் மீதத்தைக் கையாண்டு தீர்த்தல் ;

(எ) ஏதேனும் எண்ணெயை அல்லது நீரை அல்லது முற்போந்த உட்பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள எவையேனும் கருமங்கள் தொடர்பிலான தொழிற்பாடுகளிலிருந்தெழும் வேறேதேனும் பதார்த்தத்தைக் கையாண்டு தீர்த்தல் ;

(ஏ) ஏதேனும் கப்பலின் பாதுகாப்பைப் பெறும் நோக்கத்திற்காக அல்லது ஏதேனும் கப்பலுக்கு அல்லது கப்பற் சரக்கிற்கு ஏற்படும் சேதத்தைத் தடுக்கும் நோக்கத்திற்காக அல்லது மனித உயிர்களைக் காப்பாற்றும் நோக்கத்திற்காக எண்ணெய் அல்லது எண்ணெயைக் கொண்டுள்ள கலவை, கப்பலிலிருந்து வெளியேற்றப்படும் ஏதேனும் சந்தருப்பம் :

(ஐ) கப்பலுக்கேற்பட்ட சேதத்தின் விளைவாக அல்லது ஒழுக்கின் காரணமாக எண்ணெய் அல்லது எண்ணெயைக் கொண்டுள்ள கலவை கப்பலிலிருந்து வெளியேறிக் கொண்டிருப்பதாக அல்லது வெளியேறியிருப்பதாகக் காணப்படும் ஏதேனும் சந்தருப்பம் ; அத்துடன்

(ஒ) விதித்துரைக்கப்படக்கூடியனவான அத்தகைய வேறு தொழிற்பாடுகள்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் வைத்திருக்கப்பட வேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்ட எவையேனும் பதிவேடுகள் கப்பலின் தலைவரால் அல்லது கப்பலுக்குப் பொறுப்பாகவுள்ள ஆளினால் வைத்திருக்கப்பட வேண்டும் என்பதுடன், அத்தகைய கப்பல் ஒரு படகாகவிருக்குமிடத்து—

(i) அவை படகிற்கு எண்ணெயை மாற்றுவதுடன் தொடர்புடையன வாயிருக்குமளவுக்கு அந்த எண்ணெயை வழங்கும் ஆளினாலும்; அத்துடன்

(ii) அவை படகிலிருந்து எண்ணெயை மாற்றுவதுடன் தொடர்புடை யனவாக இருக்குமளவுக்கு எந்த ஆளிடம் எண்ணெய் ஒப் படைக்கப்படுகின்றதோ அந்த ஆளினாலும்,

வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் கப்பலின் தலைவர், அலுவலக முறையிலான ஒரு சம்பவக் குறிப்பேடாகவாயினும் அல்லது தனிவேறான ஒரு சம்பவக் குறிப்பேடாகவாயினும் கொண்டு செல்லப்படும் பதிவேட்டுப் புத்தகத்தில், விதித்துரைக்கப்படக்கூடியன வான தீழ்ப்பாக்கிகளின் வெளியேற்றம் அல்லது கசிவு தொடர்பிலான பதிவேடுகளைப் பதிதல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் வைத்திருக்கப்படவேண்டிய பதிவேட்டுப் புத்த கத்தினதும் ஏனைய பதிவேடுகளினதும் படிவம், பொருளளவில் விதித் துரைக்கப்பட்ட படிவத்திலானதாதல் வேண்டும்.

(6) ஏதேனும் கப்பல், பதிவேட்டுப் புத்தகமொன்றைக் கொண்டுசெல் லத் தவறுமாயின், அத்தகைய கப்பலின் சொந்தக்காரர், இயக்குநர், முக வர் அல்லது தலைவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழ் கொண்டுசெல்லப்படும் ஏதேனும் பதிவேட்டுப் புத் தகத்தில் அல்லது வைத்திருக்கப்படும் பதிவேட்டில் பதிவீடொன்றைச் செய்யும் எவரேனும் ஆள், முக்கியமான ஏதேனும் விடயம்பற்றி அவரின் அறிவுக்கெட்டியவரை பொய்யானதாகவுள்ள அல்லது பிழைவழி உய்க்கக் கூடியதாகவுள்ள ஏதேனும் பதிவீட்டைச் செய்தால் அவர் தவறொன்றுக் குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(8) எண்ணெய் தொடர்பிலானவையும் வேறு தீழ்ப்பாக்கிகள் தொடர் பிலானவையுமான பதிவேட்டுப் புத்தகங்கள், நியாயமான எல்லா நேரங் களிலும் பார்வையிடுவதற்குத் தயாராய் இருக்கக்கூடியவாறான அத்த கைய ஓரிடத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், மனிதரி னால் இயக்கப்படாதவையும் கட்டியிழுக்கப்படுபவையுமான கப்பல்களின் விடயத்திலன்றி கப்பலில் வைக்கப்பட்டிருத்தலும் வேண்டும். அவை, கடைசிப் பதிவீடு செய்யப்பட்டதன்பின்னர் இரண்டு ஆண்டுகளைக் கொண்ட ஒரு காலப் பகுதிக்குப் பேணிக்காக்கப்படுதல் வேண்டும்.

(9) அதிகாரசபை அல்லது அதிகாரசபையால் எழுத்தில் அதிகார மளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், ஏதேனும் கப்பல் இலங்கை நீர்ப் பரப்புக்களுக்குள் இருக்கும்பொழுது அதிலுள்ள எண்ணெய்ப் பதிவேட் டுப் புத்தகத்தை அல்லது தீழ்ப்பாக்கிகள் தொடர்பிலான பதிவேட்டுப் புத்தகத்தைப் பார்வையிடலாம் என்பதுடன், எண்ணெய் அல்லது வேறு தீழ்ப்பாக்கிகள் தொடர்பில் பதிவேட்டுப் புத்தகத்தில் செய்யப்பட்ட பதி

வீடுகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உண்மைப் பிரதியொன்றை அதிகாரசபைக்குக் கொடுக்குமாறு கப்பலின் தலைவரைத் தேவைப்படுத்தவும் செய்யலாம்.

(10) ஆறும் உட்பிரிவின்கீழ் அல்லது (7) ஆம் உட்பிரிவின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆளெவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதல் வேண்டும்.

(11) இச்சட்டத்தின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில்—

(அ) இப்பிரிவைப் பின்பற்றிக் கொண்டுசெல்லப்படும் ஏதேனும் பதிவேட்டுப் புத்தகம் அல்லது வைத்திருக்கப்படும் பதிவேடுகள் அவற்றிற் கூறப்படும் நிகழ்வுகளுக்கான சான்றாக ஏற்கத்தக்கவையாதல் வேண்டும்;

(ஆ) பதிவீட்டின் உண்மைப் பிரதியொன்றென, புத்தகம் எந்தக் கப்பலில் கொண்டு செல்லப்படுகின்றதோ அந்தக் கப்பலின் தலைவரால் அல்லது பதிவொன்று வைத்திருக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆளினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அத்தகைய பதிவேட்டுப் புத்தகத்திலுள்ள அல்லது பதிவேட்டிலுள்ள பதிவீட்டின் ஏதேனும் பிரதி, அவற்றிற் கூறப்பட்ட நிகழ்வுகளுக்கான சான்றாக ஏற்கத்தக்கதாதல் வேண்டும்;

(இ) இப்பிரிவைப் பின்பற்றிக் கொண்டுசெல்லப்படுவதான பதிவேட்டுப் புத்தகம் அல்லது வைத்திருக்கப்படுவதான பதிவேடு எனக் கொள்ளப்படும், அல்லது இந்த உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறான அத்தகைய அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றாகக் கொள்ளப்படும் ஏதேனும் ஆவணம், மாறாக எண்பிக்கப்பட்டாலன்றி, விடயத்திற்கேற்ப அத்தகைய ஒரு பதிவேட்டுப் புத்தகம், பதிவேடு அல்லது பிரதி என ஊகிக்கப்படுதல் வேண்டும்.

11. (1) ஏதேனும் கப்பலின் சொந்தக்காரர், இயக்குநர், தலைவர் அல்லது முகவர் எவரும், அதிகாரசபைக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டு, அதனிடமிருந்து முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலன்றி, இலங்கை நீர்ப்பரப்புக்களுக்குள் பிற்பகல் 6 மணிக்கும் முற்பகல் 6 மணிக்கும் இடைப்பட்ட நேரங்களில் எண்ணெயை ஒரு கப்பலுக்கோ கப்பலிலிருந்தோ மாற்றுதல் ஆகாது. எண்ணெய் மாற்றத்தின் மீதான கட்டுப்பாடுகள்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தல்—

(அ) எண்ணெயின் மாற்றம் இடம்பெறும் இடத்தையும், அத்துடன்

(ஆ) மாற்றம் எந்நேரத்திலும் எக்காலப்பகுதிக்கிடையேயும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதையும்,

குறிப்பிடுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதி எந்தச் சந்தர்ப்பத்திலும், அங்கீகாரத் தேதியிலிருந்து பன்னிரண்டு மாதங்களைக் கொண்ட ஒரு காலப்பகுதியை விஞ்சுதலாகாது.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகளுள் எவற்றையும் மீறுகின்றவரான, விடயத்துக்கேற்ப, கப்பலின் சொந்தக்காரராக, இயக்குநராக, தலைவராக அல்லது முகவராகவிருக்கும் ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஓர் இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

***இலங்கை நீர்ப் பரப்புக்களினுள் எண்ணெயின் அல்லது வேறு தீழ்ப்பாக்கியின் வெளியேற்றம் பற்றி அறிக்கை செய்வதற்குள்ள கடமை.***

12. எத்தகையதுமான ஏதேனும் காரணத்திற்காக ஏதேனும் எண்ணெய் அல்லது வேறு தீழ்ப்பாக்கி—

(அ) ஒரு கப்பலிலிருந்து ;

(ஆ) எண்ணெயை அல்லது வேறு தீழ்ப்பாக்கியை மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் ஓர் உபகரணத்திலிருந்து ;

(இ) கரைக்கப்பாலுள்ள ஒரு நிறுவுகையிலிருந்து ;

(ஈ) ஒரு குழாய் இணைப்பிலிருந்து ;

(உ) தரையின்மீதுள்ள ஓர் இடத்திலிருந்து,

இலங்கை நீர்ப்பரப்புக்களினுள் வெளியேறினுல், கசிந்தால் அல்லது கொட்டப்பட்டால், அப்போது, விடயத்திற்கேற்றவாறு கப்பலின் சொந்தக்காரர், இயக்குநர், தலைவர் அல்லது முகவர், அல்லது உபகரணத்தின் சொந்தக்காரர் அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆள் அல்லது கரைக்கப்பாலுள்ள நிறுவுகையின், குழாய் இணைப்பின் அல்லது தரையின் மீதுள்ள இடத்தின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அத்தகைய நிகழ்வின் எல்லா விவரங்களையும்பற்றி உடனடியாக அதிகாரசபைக்கு அறிக்கை செய்தல் வேண்டும் ; அத்துடன் அவர் அவ்வாறு செய்யத் தவறுவாராயின் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஓர் இலட்சம் ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

## பாகம் V

### கப்பல்களில் ஏற்பு வசதிகளும் சாதனங்களும்

*எண்ணெயை அல்லது தீழ்ப்பாக்கிகளை வெளியேற்றுவதற்கான அல்லது படியவிடுவதற்கான ஏற்பு வசதிகள்.*

13. (1) இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகத்தினுள்ளே அல்லது வெளியே, அத்தகைய துறைமுகங்களைப் பயன்படுத்துகின்ற அல்லது இலங்கை நீர்ப்பரப்புக்களைக் கடந்து செல்கின்ற கப்பல்கள் எண்ணெய் மீதங்களை அல்லது வேறு தீழ்ப்பாக்கிகளை வெளியேற்றுவதை அல்லது படியவிடுவதை இயலச் செய்வதற்கான ஏற்பு வசதிகளை ஏற்பாடு செய்து கொடுக்கும் தத்துவத்தை அதிகாரசபை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எவையேனும் வசதிகளை ஏற்பாடு செய்கையில் அதிகாரசபையானது வேறு எவரேனுமாளின் உதவியை நாடலாம் அல்லது அத்தகைய வசதிகள் வேறு எவரேனும் ஆளினால் ஏற்பாடு செய்து கொடுக்கப்படுவதற்கு ஒழுங்கு செய்யலாம்.

(3) பின்வருவனவற்றை விதித்துரைக்கும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம் :—

(அ) வசதிகளின் பயன்பாட்டிற்கென அறவிடப்படவேண்டிய கட்டணங்கள், அத்துடன்

(ஆ) கப்பல்கள் எந்த நிபந்தனைகளின்மீது அத்தகைய வசதிகளைப் பயன்படுத்தக்கூடுமோ அந்த நிபந்தனைகள்.

தீழ்ப்பைத் தடுப்பதற்காகக் கப்பல்களி லுள்ள சாதனங் கள்.

14. (1) இலங்கை நீர்ப்பரப்புக்களினுள் நுழையும் கப்பல் ஒவ்வொன் றும் எண்ணெய் அல்லது வேறு தீழ்ப்பாக்கி வெளியேறுதலைத் தடுப்பதற் கான அத்தகைய சாதனம் பொருத்தப்பெற்றிருத்தல் வேண்டும் என்ப துடன், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தடுப்பு தொடர் பான அல்லது அதன் இடைநேர்விளைவான அத்தகைய தேவைப்பாடு களுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(2) ஏதேனும் கப்பலின் விடயத்தில், இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு அக் கப்பலுக்கு ஏற்புடையதாகும் ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் மீறப்படுமாயின், அக்கப்பலின் சொந்தக்காரர், இயக்குநர், தலைவர் அல் லது முகவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஓர் இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத வொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

## பாகம் VI

## கடலோர ஊறுகள்

கடலோர ஊறுகள்.

15. (1) ஏதேனும் கடலோர ஊறின் அல்லது அதிலிருந்து விளையும் ஏதேனும் செயலின் விளைவாக இலங்கை நீர்ப்பரப்புக்களுக்கு அல்லது அதன் முற்கரைக்கு அல்லது அத்தகைய நீர்ப்பரப்புக்கள் அல்லது முற் கரை தொடர்பிலான எவையேனும் நலன்களுக்குத் தீழ்ப்பு ஏற்படு மிடத்து அல்லது உடனடியாகத் தீழ்ப்பு ஏற்படும் அபாயம் உள்ள விடத்து, அதிகாரசபையானது அமைச்சருடனான கலந்தாலோசனையின் பேரில், அத்தகைய தீழ்ப்பை அல்லது அத்தகைய தீழ்ப்பு ஏற்படும் அபா யத்தைத் தடுப்பதற்கு, தணிப்பதற்கு அல்லது நீக்குவதற்கு அவசியமா கக் கூடியவாறான அத்தகைய வழிவகைகளைக் கப்பல் தொடர்பில் அல்லது அதன் கப்பற் சரக்குத் தொடர்பில் எடுக்குமாறு—

(அ) கப்பலின் சொந்தக்காரருக்கு அல்லது கப்பலைத் தனதுடைமையில் வைத்திருக்கும் எவரேனுமாளுக்கு ;

(ஆ) கப்பலின் தலைவருக்கு ;

(இ) கப்பலைத் தனதுடைமையில் வைத்திருக்கும் எவரேனும் கப்பற் சேத மீட்குநருக்கு அல்லது கப்பலைத் தனதுடைமையில் வைத்தி ருப்பவரும் கப்பற் சேதத்தை மீட்கும் தொழிற்பாட்டுக்குப் பொறுப்பாகவுள்ளவருமான எவரேனும் கப்பற்சேத மீட்குநரின் சேவையாளரான அல்லது முகவரான எவரேனுமாளுக்கு ;

(ஈ) அதிகார சபையினால் பொதுவாக அல்லது சிறப்பாக அதிகாரமளிக் கப்பட்ட வேறு எவரேனும் ஆளுக்கு,

பணிப்புரைகள் விடுக்கலாம்.

(2) எவரேனும் ஆளுக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் பணிப்புரைகள்—

(அ) கப்பல் குறித்துரைக்கப்பட்ட ஓர் இடத்திற்கு அகற்றப்பட வேண்டுமென அல்லது குறித்துரைக்கப்பட்ட ஓர் இடப்பரப்பிலிருந்து அல்லது இடப்பிரதேசத்திலிருந்து அகற்றப்பட வேண்டுமென ;

(ஆ) கப்பல் குறித்துரைக்கப்பட்ட ஓர் இடத்திற்கு அல்லது இடப்பரப்பிற்கு அல்லது இடப்பிரதேசத்திற்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒரு பாதையின்மீது அகற்றப்படக்கூடாதென ;

(இ) ஏதேனும் எண்ணெய் அல்லது வேறு கப்பற் சரக்கு ஏற்றப்பட வேண்டுமென, இறக்கப்பட வேண்டுமென அல்லது பறிக்கப்பட வேண்டுமென, அல்லது ஏற்றப்படக்கூடாதென, இறக்கப்படக் கூடாதென அல்லது பறிக்கப்படக்கூடாதென ;

(ஈ) குறித்துரைக்கப்பட்ட கப்பற்சேத மீட்பு வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அல்லது மேற்கொள்ளப்படக் கூடாதென,

தேவைப்படுத்தலாம்.

(3) அமைச்சரின் அபிப்பிராயப்படி (2) ஆம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட தத்துவங்கள், தீழ்ப்பை, அல்லது தீழ்ப்பு ஏற்படும் அபாயத்தைத் தடுக்கும் அல்லது குறைக்கும் நோக்கத்துக்குப் போதாதவையாக இருப்பின் அல்லது போதாதவையாக இருப்பனவாகக் காணப்படின், அமைச்சரானவர்—

(அ) கப்பலை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அமிழ்த்துதற்கான அல்லது அழிப்பதற்கான தொழிற்பாடுகளைப் பொறுப்பேற்கலாம் ;

(ஆ) கப்பலின் கட்டுப்பாட்டைக் கையேற்பதுடன் தொடர்புபட்ட தொழிற்பாடுகளைப் பொறுப்பேற்கலாம்.

(4) இப்பிரிவின்கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்காக அல்லது செய்யப்படுவதற்குக் கட்டளையிடப்பட்ட ஏதேனும் செயலுக்காக அமைச்சருக்கு, அதிகாரசபைக்கு அல்லது அமைச்சரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு எதிராக சேதவீட்டுக்காக ஏதேனும் குடியியல் நீதிமன்றத்தில் வழக்கெதுவும் கொண்டுவரப்படுதலாகாது.

15 ஆம் பிரிவின் கீழ் எடுக்கப்படும் வழிவகைகள், உண்மையாக ஏற்பட்ட அல்லது ஏற்படவிருந்த சேதத்திற்கு விகிதாசாரமானவையாயிருத்தல்.

16. (1) பதினைந்தாம் பிரிவின்கீழ் அதிகாரசபையால் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புரையைப் பின்பற்றி ஏதேனும் செயலை நிறைவேற்றும் ஒவ்வோராளும்—

(அ) தீழ்ப்பை அல்லது தீழ்ப்பு ஏற்படும் அபாயத்தைத் தடுப்பதற்காக அல்லது குறைப்பதற்காகச் செய்யப்படும் ஏதேனும் செயல், அத்தகைய தீழ்ப்பால் உண்மையாக ஏற்பட்ட அல்லது ஏற்படவிருந்த சேதத்திற்கு விகிதாசாரமாயிருத்தலை உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

(ஆ) கொடியுடைய நாட்டினதும் மூன்றாவது மண்டல நாட்டினதும் வேறு எவரேனுமாளினதும் உரிமைகளுக்கும் அக்கறைகளுக்கும் உரிய மதிப்பளித்தல் வேண்டும்.

(2) (அ) பதினைந்தாம் பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புரையை மீறுகின்ற அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ;

(ஆ) பதினைந்தாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புரைகளைப் பின்பற்றிச் செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு வேண்டுமென்று முட்டுக்கட்டையிடுகின்ற,

ஒவ்வோராளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஓர் இலட்சம் ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(3) ஆளொருவர் இப்பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டப்படுமிடத்து, 15 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரைக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவர் உரிய விழிப்புக் கவனத்தைப் பயன்படுத்தினார் என்பதனை அல்லது அத்தகைய பணிப்புரைக்கு இணங்கியொழுகுதல் மனித உயிருக்குப் பாரதூரமான ஆபத்தை உண்டுபண்ணுமென நம்புவதற்கு நியாயமான காரணம் அவருக்கிருந்தது என்பதனை எண்பிப்பது ஓர் எதிர்காவாதமாயிருத்தல் வேண்டும்.

## பாகம் VII

### சர்வதேச சமவாயங்களைச் செயற்படுத்தல்

17. (1) இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்தக்கூடிய, ஏற்றுக்கொள்ளக்கூடிய, சம்மதிக்கக்கூடிய அல்லது அங்கீகாரமளிக்கக்கூடிய கடல் தீம்புப் பற்றிய ஏதேனும் சர்வதேச சமவாயத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதற்கு அமைச்சருக்குத் தத்துவம் இருத்தல் வேண்டும். சர்வதேச சமவாயங்களைச் செயற்படுத்துவதற்கு அமைச்சருக்குள்ள தத்துவங்கள்.

(2) அத்தகைய சமவாயங்கள், (1) ஆம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வருவனவற்றை உள்ளடக்கலாம் :—

(அ) 1954 ஆம் ஆண்டின், எண்ணெயால் கடல் தீம்படைதலைத் தடுத்தல் பற்றிய சர்வதேச சமவாயமும், பின்னரான திருத்தங்களும் ;

(ஆ) 1969 ஆம் ஆண்டின், எண்ணெய்த் தீம்புச் சேதத்திற்கான குடியியற் பொறுப்புப் பற்றிய சர்வதேச சமவாயம் ;

(இ) 1971 ஆம் ஆண்டின், எண்ணெய்த் தீம்புச் சேதத்துக்கான நட்டஈட்டிற்கு சர்வதேச நிதியம் ஒன்றைத் தாபிப்பதற்கான சர்வதேச சமவாயம் ;

(ஈ) 1969 ஆம் ஆண்டின், எண்ணெய்த் தீம்பு ஊறுகளின் விடயத்தில் ஆழ்கடலிலான இடையீடு தொடர்பான சர்வதேச சமவாயம் ;

(உ) 1973 ஆம் ஆண்டின், கப்பல்களிலிருந்து ஏற்படும் தீம்பைத் தடுப்பதற்கான சர்வதேச சமவாயமும் 1978 ஆம் ஆண்டின் மூல ஒப்பந்தமும்.

(3) அமைச்சர், இப்பிரிவின்கீழ் எவையேனும் தத்துவங்களைப் பிரயோகிக்குமுன்னர் அமைச்சரவையின் முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்.

மேலதிக எதிர்கா வாதங்கள்.

18. (1) இலங்கை அரசாங்கம், 1969 ஆம் ஆண்டின் எண்ணெய்த் தீழ்ப்புச் சேதத்திற்கான குடியியற் பொறுப்பு பற்றிய சர்வதேச சம வாயத்திற்குச் சம்மதமளிக்கும் சந்தர்ப்பத்தில், இச்சட்டத்தின் II ஆம் பாகத்தின்கீழ் எந்த ஆளுக்கெதிராக வழக்கொன்று கொண்டுவரப்பட் டுள்ளதோ அந்த ஆளுக்கு பின்வரும் மேலதிக எதிர்காவாதங்கள் உள —

(அ) அத்தகைய சேதம், சேதம் விளைக்கும் முன்னத்துடன் ஒரு மூன் றாம் திறத்தவரினால் செய்யப்பட்ட ஏதேனும் செயலினால் அல்லது செய்யாமையினால் முற்றாக விளைக்கப்பட்டதாயின் பொறுப் பெதுவும் சாராது ;

(ஆ) ஒளி அல்லது வேறு கப்பற் போக்குவரத்துத் துணைக்கருவிகளைப் பேணுவதற்குப் பொறுப்பாகவுள்ள ஏதேனும் அரசாங்கத்தின் அல்லது வேறு அதிகாரியின் அசட்டையினால் அல்லது வேறு தவ றான செயலினால் சேதம் முற்றாக விளைவிக்கப்பட்டதாயின் பொறுப்பெதுவும் சாராது.

(2) இலங்கை அரசாங்கம், 1971 ஆம் ஆண்டின் எண்ணெய்த்தீழ்ப்புச் சேதத்துக்கான நட்டஈட்டிற்கான சர்வதேச நிதியத்திற்குச் சம்மதமளிக் கும் சந்தருப்பத்தில், சமவாயத்தை வலியுறுத்துவதற்கான எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் மேல் நீதிமன்றத்தின்முன்னர் கொண்டுவரப்படு தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய நீதிமன்றம், எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்விதமிருப்பினும், அத்தகைய சம வாயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆகக்கூடிய பொறுப்பை விதிப்ப தற்கு நியாயாதிக்கமுடையதாதலும் வேண்டும்.

## பாகம் VIII

### பல்வின ஏற்பாடுகள்

சோதனை, அளவிடு முத லியவற்றிற் கான தத்துவங் கள்.

19. (1) அதிகாரசபையால் அதற்கெனப் பொதுவாக அல்லது சிறப் பாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள்—

(அ) இலங்கை நீர்ப்பரப்புக்களுக்குள்ளேயுள்ள அல்லது அத்தகைய நீர்ப்பரப்புகளுக்குள் நுழையவிருக்கும் ஏதேனும் கப்பலின் தலை வரை, இயக்குநரை, அல்லது முகவரை—

(i) கப்பலினதும், அதன் எந்திரத்தொகுதியினதும் சாதனங் களினதும் நிலைமை பற்றியும்,

(ii) அதன் கப்பற் சரக்கின் தன்மையும் தரமும் பற்றியும்,

(iii) கப்பலின் கப்பற் சரக்கும், எரிபொருளும் பற்றியும் கப்ப லின் கப்பற் சரக்கும், எரிபொருளும் களஞ்சியப்படுத்தப் பட்டிருக்கும் விதம் பற்றியும் களஞ்சியப்படுத்தப்பட் டிருக்கும் இடம் பற்றியும், அத்துடன்

(iv) கப்பல் தொடர்பில் அல்லது கப்பல்மீதுள்ள கப்பற் சரக் குத் தொடர்பில் அதிகாரசபையால் தேவைப்படுத்தப் படக்கூடியவாறான அத்தகைய வேறு கருமங்கள் பற்றியும்,

தகவல் கொடுக்குமாறு தேவைப்படுத்தப்படலாம் ;

(ஆ) இலங்கை நீர்ப்பரப்புக்களிலுள்ள ஏதேனும் கப்பலில் ஏறி, கப்ப லானது, இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு

இணங்கியொழுகுகின்றதாவெனத் தீர்மானிப்பதை இயலச் செய்வதற்கான அத்தகைய சோதனைகளையும், பரீட்சித்தல்களையும் மேற்கொள்ளலாம் ;

(இ) ஏதேனும் கப்பல் தொடர்பில் வைத்திருக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் பதிவேடுகளைச் சோதனையிடலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் பதிவேட்டிலுள்ள ஏதேனும் பதிவீட்டின் பிரதியையெடுப்பித்து அப்பிரதியானது பதிவீட்டின் உண்மைப் பிரதியென அத்தாட்சிப்படுத்துமாறு பதிவேடுகள் வைத்திருக்கும் ஆளைத் தேவைப்படுத்தலாம் ;

(ஈ) கரைக்கப்பாலுள்ள ஏதேனும் நிறுவுகைக்கு, உபகரணத்துக்கு, குழாய் இணைப்புக்கு அல்லது தரையின்மீதுள்ள இடத்திற்குச் சென்று அத்தகைய கரைக்கப்பாலுள்ள நிறுவுகை, உபகரணம், குழாய் இணைப்பு, அல்லது தரையின்மீதுள்ள இடம் இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றவாவெனத் தீர்மானிப்பதை அவருக்கு இயலச்செய்வதற்கான அத்தகைய சோதனையை மேற்கொள்ளலாம் ;

(உ) (i) ஏதேனும் கப்பல் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் அதற்கு ஏற்புடையதாகின்றதும் அல்லது ஏற்புடையதாகக்கூடியதுமான ஏதேனும் ஒழுங்குவிதிக்கு இணங்கியொழுகத் தவறுகின்றதென நியாயமான ஏதுக்களின்மீது அவர் சந்தேகப்படுவாராயின், அல்லது

(ii) வானிலை, கட்புலனுகுதன்மை அல்லது கடல்நிலைமைகள், கப்பலின் அல்லது அதன் ஏதேனும் சாதனத்தின் நிலைமை, அதன் நிறைவில் ஏதேனும் குறைவு அல்லது அதன் கப்பற்சரக்கின் இயல்பும் நிலைமையும் காரணமாக, அத்தகையதொரு கட்டளை நீதியானதெனவும் அத்துடன் ஏதேனும் எண்ணெயின் அல்லது வேறு தீழ்ப்பாக்கியின் வெளியேற்றத்தை, கசிவினை அல்லது அவை கொட்டப்படுதலை அது தடுக்குமெனவும் அவர் திருப்திப்படுவாராயின்,

அவர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய பாதையாலும் அத்தகைய வீதத்திலும் இலங்கை நீர்ப்பரப்புக்களிலிருந்து வெளியேறிச் சென்று, அத்தகைய நீர்ப்பரப்புக்களுக்கு வெளியே தங்கியிருக்குமாறு, அல்லது இலங்கை நீர்ப்பரப்புக்களினுள் அவரால் தெரிவுசெய்யப்பட்ட ஓர் இடத்திற்குச் சென்று பிணியிடுமாறு, நங்கூரமிடுமாறு அல்லது அவரால் குறித்துரைக்கப்பட்ட நியாயமான ஒரு காலத்திற்கு அங்கு தங்கியிருக்குமாறு அக் கப்பலுக்குக் கட்டளையிடலாம்.

(2) இப்பிரிவினால் அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களைப் பிரயோகிக்கும் எவரேனும் ஆள் கப்பலைக் கடற்பிரயாணத்தில் தொடர்ந்து செல்வதிலிருந்து நியாயமற்ற முறையில் தடுத்துவைத்தலோ தாமதப்படுத்தலோ ஆகாது.

(3) கப்பலுக்குப் பொருத்தப்பட வேண்டுமென இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்ட சாதனம், எந்திரத்தொகுதி என்பனவைமீது எவையேனும் பரீட்சித்தல்களை நிறைவேற்றுவதற்கு அறிவிடப்படக்கூடிய எவையேனும் கட்டளைகளை அமைச்சர் ஒழுங்குவிதியினால் வரையறுத்துரைக்கலாம்.

(4) ஒரு கணிசமான தொகை எண்ணெய் அல்லது வேறு தீழ்ப்பாக்கி இலங்கை நீர்ப்பரப்புக்களினுள் வெளியேறியுள்ளது அல்லது கசிந்துள்ளது அல்லது கொட்டப்பட்டுள்ளது என அதிகாரசபைக்கு அறிவிக்கப்படுமிடத்து அல்லது இலங்கை நீர்ப்பரப்புக்களினுள் ஒரு கணிசமான தொகை எண்ணெயின் அல்லது வேறு தீழ்ப்பாக்கியின் வெளியேற்றம், கசிவு அல்லது அவை கொட்டப்படுதல் ஏற்படக்கூடிய பாரதூரமான உடனடி ஆபத்து இருக்கின்றதென அத்தகைய அதிகாரசபை திருப்திப்படுமிடத்து, அவ்வதிகாரசபை—

(அ) இலங்கையில் குறித்துரைக்கப்பட்ட ஓர் இடப்பரப்பிற்குள் உள்ள எல்லாக் கப்பல்களுக்கும், அவை தரித்திருக்குமிடங்களை அதிகாரசபைக்கு அறிவிக்குமாறு கட்டளையிடலாம்;

(ஆ) எண்ணெயை அல்லது வேறு தீழ்ப்பாக்கியைக் கட்டுப்படுத்துதற்கு அல்லது தடைசெய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்குமாறு அல்லது அத்தகைய தீழ்ப்பைத் துப்புரவாக்குவதில் பங்கெடுக்குமாறு ஏதேனும் கப்பலுக்குக் கட்டளையிடலாம் அல்லது ஏதேனும் உபகரணத்தின், குழாய் இணைப்பின், கரைக்கப்பாலுள்ள நிறுவுகையின் அல்லது தரையின் மீதுள்ள இடத்தின் சொந்தக்காரருக்கு, இயக்குநருக்கு அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆளுக்கு அறிவுறுத்தலாம்.

ஏதேனும் காணியினுள் அல்லது வளவினுள் நுழைவதற்கான தத்துவம்.

20. (1) ஏதேனும் எண்ணெயை அல்லது வேறு தீழ்ப்பாக்கியை இலங்கை நீர்ப்பரப்புக்களிலிருந்து அகற்றும் அல்லது நீக்கும் நோக்கத்திற்கென ஏதேனும் நியாயமான நேரத்தில் கரையை அல்லது முற்கரையை அடுத்திணைந்துள்ள ஏதேனும் காணியின்மீது அல்லது வளவின்மீது நுழைதலும், பின்னர் அதிகாரசபையின் ஏதேனும் வேலையை நிறைவேற்றும் அல்லது அதற்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக, அல்லது அதிகார சபையின் ஏதேனும் தத்துவத்தினைப் பிரயோகிப்பதற்கு, ஏதேனும் பணியை நிறைவேற்றுவதற்கு, அல்லது ஏதேனும் கடமையைப் புரிவதற்கு முதனிலையான அல்லது இடைநேர்விளைவான ஏதேனும் அளவீட்டினை, பரிசோதனையை அல்லது புலனாய்வைச் செய்வதற்காக நியாயமான அளவு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய செயல்களைச் செய்தலும், அதிகாரசபைக்கு அல்லது அதற்கென அதிகாரசபையால் பொதுவாக அல்லது சிறப்பாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதிகாரசபை அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அதிகாரசபையினால் புரியப்படும் ஏதேனும் செயல், அசட்டை அல்லது தவறுகை மூலம் எவரேனும் ஆளின் ஆதனத்திற்கு ஏதேனும் சேதம் விளைக்கப்பட்டிருப்பின், அத்தகைய சேதம் தொடர்பில் நட்டஈடு செலுத்துவது அதிகாரசபையின் கடமையாதல் வேண்டும்.

(3) தமது ஆதனம் தொடர்பில் எவ்வாளுக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டதோ அவ்வாளெவரும் நீதிமன்றமொன்றிலும் நட்டஈடாகவல்லாத வேறேதேனும் பரிகாரத்திற்கு, நிவிர்த்திக்கு அல்லது நிவாரணத்திற்கு உரித்துடையவராதலாகாது.

(4) பிணக்கொன்றின் விடயத்தில் அத்தகைய சேதத்தின் தொகை விடயத்திற்கேற்றவாறு உயர்நீதிமன்றத்தால் அல்லது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**21.** (1) ஏதேனும் கப்பலின் தலைவர், அல்லது ஏதேனும் உபகாணத் தங்கு, குழாய் இணைப்புக்கு, கடலுக்கப்பாலுள்ள நிறுவுகைக்கு அல்லது தரையின் மீதுள்ள இடத்திற்குப் பொறுப்பாகவுள்ள ஓராள், அதிகார சபைக்கு அல்லது அதற்கென அதிகாரசபையால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு, அத்தகைய அதிகாரசபை அல்லது அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட ஆள் இச்சட்டத்தின்கீழ் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் அதன் அல்லது தமது கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதை இயலச் செய்வதற்குத் தமது தத்துவத்திற்குட்பட்ட எல்லா நியாயமான உதவியையும் அளித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அதிகாரசபைக்கு அல்லது அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு நியாயமாகத் தேவைப்படக்கூடிய அத்தகைய தகவல்களைக் கொடுத்துதவுதலும் வேண்டும். ஒத்துழைக்கும் கடமை.

(2) அதிகாரசபைக்கு அல்லது அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு, இச்சட்டத்தின்கீழ் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் அதன் அல்லது தமது கடமைகளை அல்லது பணிகளை நிறைவேற்றுவதிலிருந்து ஆளெவரும் முட்டுக்கட்டையிடுதல் அல்லது தடங்கல் செய்தல் ஆகாது.

(3) அதிகாரசபைக்கு அல்லது அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு, இச்சட்டத்தின் கீழ் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் கீழ் அதன் அல்லது தமது கடமைகளை அல்லது பணிகளை நிறைவேற்றுவதிலிருந்து முட்டுக்கட்டையிடுகின்ற அல்லது தடங்கல் செய்கின்ற எவரேனும், ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓர் இலட்சம் ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

**22.** இச்சட்டத்தின் கீழ் தொடரப்படக்கூடிய எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் எவ்வாறிருப்பினும், அதிகாரசபை அல்லது அதிகார சபையால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள் ஏதேனும் எண்ணெய் அல்லது வேறு தீழ்ப்பாக்கி கப்பலிலிருந்து இலங்கை நீர்ப்பரப்புக்களினுள் வெளியேற்றப்பட்டுள்ளது என நம்புவதற்கு அதற்கு அல்லது அவருக்கு நியாயமான காரணம் இருப்பின், அக்கப்பலைத் தடுத்து வைக்கலாம்; அத்துடன் அதிகாரசபையின் அபிப்பிராயப்படி இச்சட்டத்தின்கீழ் கப்பலினது சொந்தக்காரரின், இயக்குநரின், தலைவரின் அல்லது முகவரின் பொறுப்பை ஈடுசெய்வதற்குப் போதியதான ஒரு பணத்தொகையைச் சொந்தக்காரர், இயக்குநர், தலைவர் அல்லது முகவர் அதிகார சபையிடம் வைப்பிலிடும்வரை அல்லது போதியதான அத்தகைய பிணைப்பொறுப்பைச் செலுத்தும்வரை, கப்பல் அவ்விதம் தடுத்துவைக்கப்படலாம். கப்பலைத் தடுத்து வைக்கும் தத்துவம்.

**23.** (1) ஏதேனும் கப்பல் 22 ஆம் பிரிவின் கீழ் தடுத்துவைக்கப்பட்டு, முறையான அதிகாரியால் அது விடுவிக்கப்படுமுன்னர் அக்கப்பல் கடல் நோக்கிச் செல்லுமாயின், அதன் தலைவர், சொந்தக்காரர், இயக்குநர், முகவர் அல்லது கப்பலைக் கடலுக்கனுப்பும் செயலுக்குத் திறந்தவராக அல்லது உடந்தையாக இருக்கின்ற வேறு எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓர் இலட்சம் ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும். தடுத்துவைக்கப்பட்ட கப்பல் கடல்நோக்கிச் செல்லுதல்.

(2) இச்சட்டத்தின்கீழ் கப்பலொன்றைத் தடுத்து வைக்கும் அதிகாரம் பெற்ற எவரேனுமாள், அவசியமானதென அவர் கருதினால், இலங்கை ஆயுதப்படையின் உதவியை நாடலாம்.

*அந்நியக் கப்பலைத் தடுத்து வைத்தலின் மீது காவற்றூது அலுவலருக்கு அறிவித்தல் கொடுத்தல்.*

**24.** (1) (அ) ஏதேனும் அந்நியக் கப்பல் இச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பொழுதெல்லாம், அத்துடன்

(ஆ) அத்தகைய கப்பலின் தலைவருக்கெதிராக அல்லது சொந்தக்காரருக்கெதிராக இச்சட்டத்தின்கீழ் எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்பொழுதெல்லாம்,

கப்பல் எந்த நாட்டிற்குரியதோ அந்த நாட்டின் காவற்றூது அலுவலருக்கு, அப்போதைக்குக் கப்பல் எந்த நாட்டின் துறைமுகத்தில் அல்லது துறைமுகத்துக்கண்மையில் இருக்கின்றதோ அந்தத் துறைமுகத்தில் அல்லது அத்துறைமுகத்துக்கண்மையிலாக, உடனடியாக அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சேர்ப்பிக்கப்படவேண்டிய அறிவித்தல், எந்த ஏதுக்களின் மீது கப்பல் தடுத்துவைக்கப்பட்டுள்ளதோ அல்லது வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவோ அந்த ஏதுக்களைக் குறித்துரைத்தல் வேண்டும்.

*அறிவித்தல்கள் முதலியன எழுத்தில் இருத்தல்.*

**25.** இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவரல்லாத எவரேனும் ஆளுக்கு இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் அறிவித்தல், அதிகாரம், கட்டளை, பணிப்புரை அல்லது வேறு தகவல் அதிகாரசபையால் வழங்கப்பட வேண்டுமென அல்லது விடுக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுமிடத்து அல்லது அங்கீகரிக்கப்படுமிடத்து இவை எழுத்தில் வழங்கப்படுதல் அல்லது விடுக்கப்படுதல் வேண்டும்.

*ஆவணங்களைச் சேர்ப்பித்தல்.*

**26.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென எவரேனும் ஆளுக்கு ஏதேனும் ஆவணம் சேர்ப்பிக்கப்படவிருக்குமிடத்து, அந்த ஆவணம்--

(அ) ஏதேனும் விடயத்தில், அதன் பிரதியொன்றை, ஆவணம் எந்த ஆளுக்குச் சேர்ப்பிக்கப்படவுள்ளதோ அந்த ஆளுக்கு நேரடியாக அல்லது அவரது அறியப்பட்ட வதிவிடத்தில் அத்தகைய பிரதியை விட்டுவைப்பதன் மூலம் அல்லது அத்தகைய பிரதியை அஞ்சல் மூலம் செலுத்துவதன்மூலம் அல்லது அனுப்புவதன் மூலம்;

(ஆ) ஆவணம், கப்பலின் தலைவருக்கு (தலைவரொருவர் இருக்குமிடத்து) அல்லது ஒரு கப்பலுக்குரிய ஆளொருவருக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டியிருக்குமாயின், கப்பலுக்கு ஏவல் கொள்பவராக அல்லது பொறுப்பானவராகக் கப்பலிலிருக்கின்ற அல்லது இருப்பவராகத் தோன்றுகின்ற ஆளிடம் அவருக்கென விட்டுவைப்பதன் மூலம்; அத்துடன்

(இ) ஆவணம் ஒரு கப்பலின் தலைவருக்குச் சேர்ப்பிக்கப்பட வேண்டியதாயிருந்து அத்துடன் தலைவரில்லாத கப்பல் இலங்கை நீர்ப்பரப்புக்களில் இருக்குமாயின், கப்பலின் முகாமைச் சொந்தக்காரருக்கும், அல்லது இலங்கையில் முகாமைச் சொந்தக்காரர் இல்லா

திருந்தால், இலங்கையில் வதியும் சொந்தக்காரரின் எவரேனும் முகவருக்கும், அல்லது அத்தகைய முகவர் அறியப்படாதிருப்பின் அல்லது தெரிந்துகொள்ளப்படாதிருப்பின் அதன் பிரதியொன்றைக் கப்பலில் துலாம்பரமான ஓரிடத்தில் ஒட்டி விடுவதன் மூலம்,

சேர்ப்பிக்கப்படலாம்.

(2) கப்பலைக் கடலுக்குச் செல்லத் தகுதியற்றதெனத் தடுத்து வைத்தல் பற்றிய இச்சட்டத்தின் கீழான ஏதேனும் ஆணை ஒரு கப்பலின் தலைவருக்குச் சேர்ப்பிக்கப்படுவதற்கு முட்டுக்கட்டையிடுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், அதற்கெனக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் முட்டுக்கட்டையிடுதலுக்குத் திறத்தவரொருவராகவுள்ள அல்லது உடந்தையாகவுள்ள கப்பலொன்றின் எவரேனும் சொந்தக்காரர் அல்லது தலைவர், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், அதற்கெனக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவினை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

**27.** கப்பலின் சொந்தக்காரர், இயக்குநர், தலைவர் அல்லது முகவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு, விடயத்துக்கேற்றவாறு மேல் நீதிமன்றத்தால் அல்லது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் கட்டளையிடப்பட்ட நேரத்தில், விதிக்கப்பட்ட ஏதேனும் குற்றப்பணம் அல்லது உறப்பட்ட ஏதேனும் பொறுப்பு நிறைவேற்றப்படாதிருக்குமிடத்து, நீதிமன்றம், கொடுப்பனவை வலியுறுத்துதற்கான எவையேனும் தத்துவங்களுடன் சேர்த்து மேலதிகமாக செலுத்தப்படாதிருக்கும் தொகையானது அக்கப்பலையும், அதன் கயிறுகப்பி, தளபாடம், அணிமானி என்பவற்றையும் வலிந்துபற்றி விற்பனை செய்லதன் மூலம் அறவிடப்பட வேண்டுமெனப் பணிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும். கப்பலின் விற்பனை.

**28.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இலங்கையின் அல்லது வேறு ஏதேனும் நாட்டின் கடற்படைக்கு, தரைப்படைக்கு அல்லது வான்படைக்குச் சொந்தமான கப்பல்களுக்கு ஏற்புடையனவாகா. கடற்படைக் கப்பல்களுக்கு ஏற்புடையதாகாது என்பது.

**29.** (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தில் முரணுகை எது எவ்வாறிருப்பினும், இலங்கை நீர்ப்பரப்புக்களில் புரியப்படும் இச்சட்டத்தின் கீழான தவறெவ்வொன்றும் இலங்கையின் ஏதேனும் நீதி நிருவாக வலயத்தில் அமரும் மேல்நீதிமன்றத்தால் அல்லது கடலாண்மை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் மேல் நீதிமன்றத்தால் விளங்கப்படற்பாலதாதல் வேண்டும். நீதிமன்றங்களின் நியாயாதிக்கம்.

(2) இச்சட்டத்தின் II ஆம் பாகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு செயல் அல்லது செய்யாமை தொடர்பில் தொடரப்படும் ஒவ்வொரு வழக்கும், வேறு ஏதேனும் சட்டத்தில் முரணுகை எது எவ்வாறிருப்பினும், இலங்கையின் ஏதேனும் நீதி நிருவாக வலயத்தில் அமரும் மேல் நீதிமன்றத்தால் அல்லது கடலாண்மை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் மேல் நீதிமன்றத்தால் அல்லது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் விளங்கப்படற்பாலதாதல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு நீதிமன்றமும் இச்சட்டத்தால் ஏற்பாடு செய்யப்படும் ஆகக் கூடுதலான பொறுப்பைச் சுமத்துவதற்கான நியாயாதிக்கத்தைக் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

(3) ஏதேனும் தத்துவத்தின் பிரயோகம் உட்பட, எந்தக் கருமம் அல்லது கேள்வி தொடர்பில் இச்சட்டத்தால் அல்லது இச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தால் அல்லது சட்டவாக்கத்தின்கீழ் ஏற்பாடு எதுவும் அல்லது போதிய ஏற்பாடு எதுவும் செய்யப்படாதிருக்கின்றதோ அந்த ஏதேனும் கருமம் அல்லது கேள்வி இச்சட்டத்தின்கீழ் தொடரப்படும் ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் எழுகின்றவிடத்து, இச்சட்டத்தால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தால் அல்லது சட்டவாக்கத்தின்கீழ் செய்யப்படும் ஏதேனும் ஏற்பாட்டுடன் முரண்படாதிருக்கின்றவாறான அல்லது ஒவ்வாததாய் இல்லாதிருக்கின்றவாறான அந்த அளவுக்கு அத்தகைய கட்டளைகளை ஆக்குதற்கான அல்லது அத்தகைய பணிப்புரைகளை விடுப்பதற்கான தத்துவத்தை நீதிமன்றம் கொண்டிருத்தல் வேண்டும்.

*கைது செய்யும் தத்துவம்.*

30. (1) இச்சட்டத்தின் கீழ் அல்லது இதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் தவறொன்றைப் புரிந்திருக்கும் எவரேனும் ஆளை, அதிகார சபையால் எழுத்தில் சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள் அல்லது ஒரு பொலிசு அலுவலர் பிடியாணையின்றிக் கைது செய்யலாம் என்பதுடன், சட்டத்திற்கிணங்க நடவடிக்கையெடுக்கப்படுவதற்காக அவரை விடயத்திற்கேற்றவாறு மேல் நீதிமன்றத்தின் முன்னர் அல்லது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரலாம்.

(2) இச்சட்டத்தின் கீழ் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் தவறொன்று புரியப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய தவறைப் புரிவதில் பயன்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் பொருள் கைப்பற்றப்பட்டு, மேல் நீதிமன்றம் அல்லது கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய இடத்தில் தடுத்துவைக்கப்படலாம்.

*யார் குற்றவழக்குத் தொடரலாம் என்பது.*

31. இச்சட்டத்தின்கீழான ஒரு தவறு தொடர்பிலான குற்றவழக்கு ஒவ்வொன்றும் சட்டத்துறைத் தலைமையதிபதியால் அல்லது அதற்கெனச் சட்டத்துறைத் தலைமையதிபதியால் எழுத்தில் சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

*குற்றப்பணங்கள் திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப்படுதல்.*

32. இச்சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட எல்லாக் குற்றப்பணங்களும் திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

*அதிகார சபையால் தத்துவங்கள் கையளிக்கப்படுதல்.*

33. இச்சட்டத்தின்கீழ் அதிகாரசபைக்கு அளிக்கப்பட்ட எல்லா அல்லது எவையேனும் தத்துவங்களை நிறைவேற்றும் நோக்கத்திற்கென அதிகாரசபையானது அமைச்சரின் அங்கீகாரத்துடன் எவரேனும் ஆளைப் பெயர் குறித்தோ அல்லது பதவி குறித்தோ நியமிக்கலாம்.

34. (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப் படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பிலும் அத்துடன் எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) அமைச்சரானவர், குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப் பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், பின்வரும் எல்லா அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்க லாம் :—

(அ) அதிகாரசபையால் அனுமதிச்சீட்டுகள் வழங்கப்படுதலை ஆளும் நிபந்தனைகளைக் குறித்துரைத்தல் ;

(ஆ) தீழ்ப்பைத் தடுப்பதற்கெனக் கப்பல்களில் பொருத்தப்பட வேண் டிய சாதனங்களைக் குறித்துரைத்தல் ;

(இ) எண்ணெய் அல்லாததும், நீருடன் சேர்க்கப்படும் போது நீரைச் சுத்தமற்றதாக, நச்சுத்தன்மையுள்ளதாக, தூய்மை யற்றதாக அல்லது எவரேனும் ஆளின் சுகாதாரத்திற்கு, பாது காப்பிற்கு அல்லது நலனுக்குத் தீங்கு விளைப்பதாக அல்லது கடல் வாழ்வனவற்றுக்கு ஊறு விளைப்பதாக ஆக்கக்கூடியவாறு அந்நீரை மாசுபடுத்தும் தன்மையுடையதுமான ஏதேனும் பதார்த்தத்தை அல்லது பதார்த்தங்களின் வகுப்பைக் குறித் துரைத்தல்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அது, அத்தகைய வெளியீட் டுத் தேதியன்று அல்லது அந்த ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்படும் ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது கசெற் றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத் துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண் டும்.

35. (1) இச்சட்டத்தின்கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலினால் விளைக் கப்பட்ட அல்லது விளைக்கப்படக்கூடிய ஏதேனும் சேதத்துக்காக அதிகார சபைக்கு எதிராகத் தொடர்ச்சி அல்லது குற்றவழக்கெதுவும் இருத்தலாகாது. குறித்த சில சந் தருப்பங்களில் அதிகார சபைக்கு எதி ராக அல்லது ஊழியர்களுக் கெதிராகத் தொடர்ச்சிகள் அல்லது வழக்கு நட வடிக்கைகள் இருத்த லாகாது.

(2) இச்சட்டத்தின்கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக, அதிகார சபையின் ஊழியத்திலுள்ள எவரேனும் ஆளுக்கெதிராகத் தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் இருத்தலாகாது.

அதிகாரசபை தொடர்பில் அமைச்சரின் தத்துவங்கள்.

**36.** (1) இச்சட்டத்தின் கோட்பாடுகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன் கொடுக்கும் நோக்கத்திற்கென அமைச்சரானவர் அதிகாரசபைக்கு பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளை எழுத்தில் விடுக்கலாம் என்பதுடன், அதிகாரசபையானது அத்தகைய பணிப்புரைகளுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

(2) அமைச்சர், தமக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் அதிகாரசபையின் ஆதனங்கள், அலுவல்கள் என்பன தொடர்பிலான விவரத்திரட்டுக்களையும், கணக்குகளையும், வேறு தகவல்களையும் தாம் தேவைப்படுத்தக்கூடியதான அத்தகைய படிவத்தில் தமக்குக் கொடுத்துதவுமாறு அதிகாரசபையைக் காலத்துக்குக்காலம் எழுத்தில் பணிக்கலாம் என்பதுடன், அதிகாரசபையானது அத்தகைய பணிப்புரை ஒவ்வொன்றையும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) அமைச்சர், அதிகாரசபையின் எல்லாச் செயற்பாடுகளும் அல்லது ஏதேனும் செயற்பாடு, தம்மால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால் புலனாய்வு செய்யப்பட்டு அவற்றின்மீதான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம் என்பதுடன், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதன் மேல் அத்தகைய கட்டளையை நிறைவேற்றுவதற்கான அத்தகைய எல்லா வசதிகளையும் அதிகாரசபை அளித்தலும் வேண்டும்.

பொருள்கோடல்.

**37.** இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"படகு" என்பது, பாய்கள் அல்லது எந்திர வலு வழியாகத் தன்னுந்து வழிவகைகள் இல்லாததும் இழுத்துச்செல்லப்பட வேண்டியதும் அல்லது வற்றுப்பெருக்கின் அல்லது நீரோட்டத்தின் செல்வாக்கின்கீழ் நகர்ந்து செல்ல அனுமதிக்கப்படுவதுமான ஒரு படகு எனப் பொருளாகும் என்பதுடன், ஒரு வத்தையையும் அல்லது அதனையொத்த ஏதேனும் கலத்தையும் உள்ளடக்கும்;

"கொட்டுதல்" என்பது, ஏதேனும் பொருளை வேண்டுமென்றே கடலினுள் கையாண்டு தீர்த்தல் எனப் பொருளாகும் என்பதோடு, போடுதலையும், எறிதலையும் இடுதலையும் அல்லது படியவிடுதலையும் உள்ளடக்கும்;

"சம்பவம்" என்பது, தீழ்ப்புச் சேதம் தொடர்பில், சேதங்களை விளைக்கின்ற ஒரே மூலத்தையுடைய ஏதேனும் நிகழ்வு அல்லது நிகழ்வுகளின் தொடர்ச்சி எனப் பொருளாகும்;

"கடலோர ஊறு" என்பது, கப்பல்களின் மோதுகையொன்று, தரைதட்டல் அல்லது கடற்போக்குவரத்தின் வேறு சம்பவம் அல்லது ஒரு கப்பலுக்கு அல்லது கப்பற் சரக்கிற்குப் பொருட்சேதத்தினை அல்லது உடனடியான பொருட் சேதம் ஏற்படக்கூடிய ஆபத்தினை விளைக்கும் கப்பற்றளத்தில் அல்லது வெளிப்புறத்தில் ஆன வேறு நிகழ்வு எனப் பொருளாகும்;

"தலைவர்" என்பது, ஒரு வலவன் தவிர, ஏதேனும் கப்பலின் ஏவுதலைக் கொண்டுள்ள அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள ஒவ்வோராளையும் உள்ளடக்கும்;

" இருப்பாட்சியாளர் " என்பது, ஓர் இடத்தில் அல்லது தரையில் உண்மையாக இருப்பாட்சியில் உள்ள ஆள் அல்லது அத்தகைய ஆள் இல்லாவிடின், அதன் சொந்தக்காரர் எனப் பொருளாகும் ;

" கரைக்கப்பாலுள்ள நிறுவுகை " என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்கும் :—

(அ) இலங்கை நீர்ப்பரப்புக்களின் கடற்படுக்கையிலும் அடிமண்ணிலும், அல்லது கடற்படுக்கையின்மீதும் அடிமண்ணின்மீதும் அல்லது கடற்படுக்கை அடிமண்ணுக்கு மேலாகவும் நிருமாணிக்கப்பட்ட, நிறுவப்பட்ட, வைக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட (நிரந்தரமானதாயினுஞ்சரி, தற்காலிகமானதாயினுஞ்சரி) ஏதேனும் நிறுவுகை அல்லது உபாயம் ;

(ஆ) கடற்படுக்கையில் அல்லது கடற்படுக்கையின் மேல் அத்துடன், கண்ட ஓட்டின், அடிமண்ணில் அல்லது அடிமண்ணின்மேல், அவற்றின் இயற்கை மூல வளங்களை நாடித்தேடுதல் தொடர்பாக நிருமாணிக்கப்பட்ட, நிறுவப்பட்ட, வைக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட (நிரந்தரமானதாயினுஞ்சரி, தற்காலிகமானதாயினுஞ்சரி) ஏதேனும் நிறுவுகை அல்லது உபாயம் ;

(இ) ஒரு கப்பல் தவிர்ந்த ஏதேனும் மிதக்கும் பொருள் (இலங்கையின் எவையேனும் நீர்ப்பரப்புக்களின் படுக்கையுடன் அல்லது கரையுடன் நங்கூரமிடப்பட்டிருப்பின் அல்லது இணைக்கப்பட்டிருப்பின், அல்லது அவற்றின் இயற்கை மூலவளங்களைக் கண்டறிதலும், நாடித் தேடுதலும், தொடர்பாகக் கண்ட ஓட்டின் மேல் நீர்ப்பரப்புக்களின் படுக்கையுடன் நங்கூரமிடப்பட்டிருப்பின்) ;

(ஈ) ஏதேனும் அறிவியல் ஆராய்ச்சிச் செயற்பாடு தொடர்பாக இலங்கை நீர்ப்பரப்புக்களினது அல்லது கண்ட ஓட்டினது கடற்படுக்கையில் அல்லது கடற்படுக்கையின் மேல் அத்துடன் அடிமண்ணில் அல்லது அடிமண்ணின் மேல் நிருமாணிக்கப்பட்ட, நிறுவப்பட்ட, வைக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட ஏதேனும் நிறுவுகை அல்லது உபாயம் ;

(உ) கரைக்கப்பாலுள்ள நிறுவுகையொன்றைக் கரைக்கப்பாலுள்ள வேறு ஏதேனும் நிறுவுகையுடன் இணைக்கும் ஏதேனும் கட்டமைப்பு ;

" எண்ணெய் " என்பது, ஏதேனும் விவரணத்தைச் சேர்ந்ததும் ஏதேனும் வடிவத்திலானதுமான எண்ணெய் எனப் பொருளாகும் என்பதுடன், மதுசாரங்களையும் ஏதேனும் விவரணத்தினதான எண்ணெயிலிருந்து, நிலக்கரியிலிருந்து, தாரிலிருந்து, நிலக்கீலி

லிருந்து, நிலக்கீல் குழம்பிலிருந்து, எரிபொருள் எண்ணெயிலிருந்து, அசுத்த எண்ணெய்க் கழிவிலிருந்து, அத்துடன் கழிவுடன் கலந்த எண்ணெயிலிருந்து உற்பத்தியாக்கப்பட்ட வேறு வடிகளையும் அத்துடன் கழிவுடன் அல்லது வேறு பதார்த்தத்துடன் ஆன எண்ணெயையும் உள்ளடக்கும் ;

"இயக்குநர்" என்பது, ஒரு கப்பல் தொடர்பில், கப்பலானது நேரங் குறித்து வாடகைக்கமர்த்தப்பட்டதாயினுஞ்சரி, பயணங் குறித்து வாடகைக்கமர்த்தப்பட்டதாயினுஞ்சரி, அல்லது உரித்துமாற்றல் வழியாக வாடகைக்கமர்த்தப்பட்டதாயினுஞ்சரி, வாடகைக்கமர்த்துநரையும் உள்ளடக்கும் ;

"சொந்தக்காரர்" என்பது, சொந்தக்காரராகப் பதிவுசெய்யப்பட்ட ஆள் அல்லது பதிவு இல்லாதவிடத்து, சொந்தமாக வைத்திருக்கும் அல்லது உடைமையில் கொண்டுள்ள ஆள் எனப் பொருளாகும் ;

"தீழ்ப்பாக்கி" என்பது, இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென ஒரு தீழ்ப்பாக்கியாக இருப்பதாக அமைச்சரால் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் பதார்த்தம் அல்லது பதார்த்தங்களின் ஒரு வகுப்பின் பாகமொன்றாயிருக்கும் ஏதேனும் பதார்த்தம் எனப் பொருளாகும் என்பதோடு, அத்தகைய பதார்த்தத்தால் மாசுபடுத்தப்பட்ட ஏதேனும் நீரையும் உள்ளடக்கும் ;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்பட்ட எனப் பொருளாகும் ;

"கப்பல்" என்பது, கடற்சுற்றுடலில் தொழிற்படுகின்ற எத்தன்மையதுமான ஏதேனும் இனத்தைச் சேர்ந்த ஒரு கலம் எனப் பொருளாகும் என்பதுடன், மீன்பிடி இழுகப்பல்கள், நீரியல் மென்தகடு வள்ளங்கள், காற்றுமெத்தை வாகனங்கள், எளிதமிழ்வுப்படகுகள், படகுகள், மிதவை மரக்கலங்கள் அத்துடன் உந்துமுறை அல்லது உந்துதல் முறை இல்லாதது பற்றிக் கருத்திற்கொடாது நிலையான அல்லது மிதவை மேடைகள் ஆகியவற்றையும் உள்ளடக்கும் ;

"இலங்கை நீர்ப்பரப்புக்கள்" என்பது, 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு பின்வரும் நீர்ப்பரப்புக்கள் எனப் பொருளாகும் :—

(அ) ஆள்புலக் கடற்பரப்பு,

(ஆ) அணித்தாயுள்ள வலயம்,

(இ) தனித்த பொருளாதார வலயம்,

(ஈ) கண்ட ஓடு,

(உ) தீழ்ப்புத் தடுப்பு வலயம் ; அத்துடன்

"மாற்றுதல்" என்பது, எண்ணெய் அல்லது ஏதேனும் தீழ்ப்பாக்கி தொடர்பில், தொகையாக மாற்றுதல் எனப் பொருளாகும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30 ; (வெளிநாடு) ரூபா 40 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*